# தன்னார்வ தொண்டர்கள்




நமக்கு உயிரை (ஆவியை) அளித்தவர் இறைவன்;
சொந்த உறவை (ஆத்துமாவை) தந்தவர் இறைவன்;
அன்பை (தேவ வார்த்தையை)
கொடுத்தவர் இறைவன்;
தெய்வப் பண்பை (தேவ ஆவியை)
அளித்தவர் இறைவன்;
ஏதேனில் பசுமையாய் வாழ்ந்தவன் மனிதன்.

அந்தோ!

பகைமையை திணித்தான் மாயவன் (பல வேஷக்காரன்);
சுய மகிமைக்காய் கிரீடத்தை தேடினவன் - பாவ
இச்சையின் உருவத்தில் திருடன்.

மனித இதயத்தை திருடும் நோக்கத்தில், புகழ் உச்சியில்
சென்றிட (ஆராதிக்கப்பட), தோன்றினான்
மிருகத்தின் (பாம்பின்) சாயலில்;
தேவ சாயலில் இருந்தனர் மனிதனும், மனுஷியும்;
புரிந்திடவில்லை முதல் குடும்பத்திற்கு பொல்லாதவனை;
நாமும் கூடத்தான் தெய்வ அன்பை (இயேசுவை),
புரிந்து கொள்ள அச்சப்படுகின்றோம்.




சுலபமாக கிடைப்பது பாவம் (அநீதி);
அவை சாத்தானின் நினைவுகள்;
அது தங்குவதற்கு இடமில்லை,
பரமண்டலங்களில்; அதனால்
ஏதேனில் (இந்த பூமியில்
தேவன் கட்டிய வீடு), தவணை முறையில் தன்னைப் போல
மாற்றியவன் திருடன் (கடவுளின் எதிரி); முதலில் பாம்பு, பின்பு
ஏவாள், கடைசியில் தேவ மகனாக உருவாகிய ஆதாம்.
இன்று பாருங்கள், மொத்த குத்தகையாக அல்லவா
மனிதர்களை அள்ளிப்போகின்றான், சொந்த தேசத்திற்கு
(எரியும் நரகத்திற்கு).
ஆமாம்! நாம் தான் தன்னார்வ தொண்டர்களாயிற்றே!
இவன் விருந்துக்கு வரமாட்டானா என்ற ஏக்கமே
நிறைய பேருக்கு, இன்றும்!

உயிரை விதைப்பவர் தேவன், அதை அறுப்பவன்
திருடன் என்றாயிற்று மனிதனின் கதை.
ஆவியாய் இருப்பதுதான் சாத்தானிடமிருக்கும் ஒரே
நன்மை - அதனால்
மனிதனை தினமும், தீமையில் (பாவத்தில்)
பாவியாய் அல்லவா மாற்றுகின்றான்.



தேவனின் பொறுமையை வெறுமையாய்
நினைத்திடல் நன்றல்ல - அதுஅவர்
நம்மேல் வைத்த உண்மை அன்பின் புதிய ஏற்பாடு.
ஏன்?



சரீர பிள்ளைகளை கொன்றிட உள்ளமில்லாதவரல்ல
நமது பரம பிதா- அதனால்தான்
ஆவியின் பிள்ளை இயேசுவை, சிலுவையிலே
பாவிகளுக்காய் கிரயமாக்கினார்;
இந்த இரட்சகரை ஏற்று கொள்ள மறுக்கின்றோம்.
தேவன் தமது நீதியில் தீர்ப்பு செய்வார், தகுந்த
காலத்திலே, அவரது நேரத்திலே.

பக்தியற்ற சமுதாயத்தை படைக்கவில்லை பரமன்;
அதனால் இன்று,
நாம் சாத்தானின் பல வேஷங்களை ஆராதிக்கும்,
போலி பக்தர்களாக அல்லவா மாறிப்போனோம்.

சாத்தான் தன்னை,
'கடவுள் என்று சொல்லிக்கொண்டு திரிகிறான்;
பல வேஷங்களை போட்டுகிட்டு அலைகிறான்;
உண்மை தெய்வத்திற்கு விரோதமாய் திருப்புறான்;
பாடையிலே மனிதனை தினம் அனுப்பறான்'.



ஆண் என்றும், பெண் என்றும், புலி என்றும்,
பூனை என்றும், எத்தனை விபரீத ஆசைகள்,
அத்தனையும் அவனது இச்சைகள்;
ஐயோ!
என்று தனியுமோ இவனது கடவுள் விரோத யோசனைகள்.
பரிசுத்த ஆலயங்களை (மனித உடல்களை) சாராய
கிடங்காகவும், புகை எழுப்பும் புணலாகவும் மாற்றி,

அசுத்தப்படுத்தி, ஜாதிகளை ஈன மாக்கியவன்,
இந்த திருடன்.
அதற்கும் மேலாக, தேவனைத்துதிக்க வேண்டிய வாயிலே,
பொல்லாத பொருள்களை போட்டு, புலம்பிக் கொண்டு
துப்பவும், ஆடவும் செய்கிறான், மனிதனை.

தன்னார்வ தொண்டர்கள் இருக்கும் வரை இவனுக்கு
ஒரே ஜாலி;
ஏனென்றால், இவனது ஆசைக்கு,





நாமல்லவா ஆகின்றோம் மரண பலி.
இவனது உதவியால் இன்று மனிதன், தன்
தலைவலிக்கு கொடுக்கும் மரியாதையை கூட,
உயிர்ப்பலிக்கு (மரணத்திற்கு) அளிப்பதில்லை.
மரணம் இயற்கையாகி எத்தனையோ காலமாகி
விட்டது; இன்றோ, அது ஒரு அன்றாட செய்தி!
மரணம் புயலைப் போல வீசினாலும், கடலைப்போல
கொந்தளித்தாலும், மழை வெள்ளமாக பெருக்-
கெடுத்தாலும், இல்லை பூமியே குலுங்கினாலும் (அதிர்ச்சி),
புரிந்து, திருந்திட புத்தியில்லாத மனிதர்கள் நாம்;
ஆனாலும்,
துர்க் கோபத்திலே, படைத்த தெய்வத்தை பயிப்பதற்கு
மாத்திரம் மறப்பதில்லை; இது எந்த மனுஷ நீதி
என்றுதான் புரியவில்லை.

தெய்வ இரக்கம் இன்னும் எத்தனை காலங்கள்தான்
தொடரும் என்று நம்புகின்றோம்;
போலியான பல தெய்வங்கள் உலகமெங்கும்;
குடும்ப சண்டைகள், தெய்வீக லீலைகள்;
பேச்சையும், மூச்சையும் கொடுத்தவர், பேசாமல்
இருந்திடுவார் என்று நினைத்திடல் மடமை.
அவர் கோபத்திலே பேசிய போது - உலகமே
நீரினால் நிரம்பியது(சுமார் நான்காயிரம்
ஆண்டுகளுக்கு முன்பு);



அத்தனை உயிர்களும் அதனுள், சடலங்களாக
(உயிரற்றவர்களாக), ஒரே ஒரு குடும்பத்தை தவிர.

அதன் பிறகு தமது அன்பிலே திருவுளம்
பற்றின வேலையிலோ, பூமியே சொந்த மகனுடைய
(இயேசு) இரத்தத்தில், அத்தனை பாவிகளும் அதனால்
நீதிமான்களாக.



ஒரு முறை கழுவப்பட்ட பூமியின் சாபமானது,
நிரந்தரமானது;
அதுதான் தேவ நீதி.
ஆனால் மனிதர்களோ உலக நீதியை பேசும் உத்தமர்கள்;
நாம் சாபத்தில் பிறந்தாலும், பாவத்தில் வளர்ந்தாலும்,
என்றென்றும் வாழ்ந்திட, ஜீவனைப்பெற்றிட,
நித்திய மரணத்தை ஜெயித்திட்ட இயேசுவைத்தவிர
வேறு எவர் உளர்;
பார்ப்போமே நமது உலக நீதியை புரட்டி.



உன்னத வாழ்விற்கு உரிமையாய் அழைக்கின்றார்,
இலவசமாய் விசா (தம் உயிரை) கொடுத்து;
நம் உள்ளத்திலே இன்று அவருக்கு அனுமதி
மறுத்தால், அழிவு நிச்சயம்;
அது தேவ சத்தியம்.
போரட்டம் தேவையில்லை;அவர் இறைவன்,
நாம் மனிதர்கள்;அவர் தந்தை, நாம் பிள்ளைகள்.
பரலோகத்தில் அவர் குடும்பத்தில்தான் எத்தனை
சமாதானம்; மகன் வலப்புறம், அவர் ஆவியோ
மனித உள்ளங்களில்; மூவரும் பரிசுத்தம்.
சண்டை போட்டவன் பாதாளத்தில் - நாம்
எதற்கு சேர வேண்டும் அவன் கட்சியில்.
உலக நீதியின்படி பார்த்தாலும், ஆளும்
கட்சியில் இருப்பதுதானே மனிதர்க்கு அழகு.



சிலுவையிலே வெற்றிசிறந்தவர் இயேசு; இராஜாதி
இராஜாவாய் அபிஷேகம் பெற்று, எல்லா மகிமையுடனும்
வீற்றிருக்கும் போது - எதிர்க்கட்சி தலைவனிடம்
நமக்கு எதற்கு கூட்டு;
நிறுத்திடுவோம் தன்னார்வ சேவைதனை;
கொடுத்திடுவோம் நம் உள்ளங்களை தேவனிடம்;
செலுத்திடுவோம் அங்கு தூய ஆராதனை.

வழக்கு ஒன்று தீர்க்கப்படாமலே உள்ளது,
ஒவ்வொருவர் வாழ்விலும்;
ஆமாம் அது நித்திய மரண வழக்கு.
கொண்டு வந்தவன் இன்றும் உல்லாசமாகத்தான் உலகை
சுற்றி வந்து கொண்டு இருக்கின்றான் - ஏனென்றால்
நாமல்லவா போராடுகிறோம் இவனுக்காக,
இறைத்தந்தையிடம்.
எவ்வளவு தந்திரசாலி பார்த்தீர்களா இவனை;
என்றும் வாழும் இறைவனை, நாம் ஆவியோடும்
உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்.
மற்ற எந்த வழிபாட்டு வேதனைகளும், இந்த தீயவனின்
ஆசைகளுக்குத்தான்; கடவுள் இல்லையென்று சொல்லி,
தங்களையே ஆராதிக்கும் உலக ஞானிகளும் இவன்
பிள்ளைகள்தான்.
இவன் ஒன்றும் நம்மை தத்து எடுத்த தந்தையல்ல;
பல வேஷங்களில் தோன்றினாலும், ஆகாயத்திலே கூடு
கட்டினாலும், ஒரு விசித்தரமான
பிறவியாகிப்போனவன், பொல்லாத யோசனைகளால்;
அதனால் - இவன் நித்திய மரணத்துக்கு சொந்தகாரன்.



அருமை நண்பர்களே!
சற்றே சிந்திப்போம்.
ஒருவராலே நாம் உருவாகி இருக்க, அவராலே நாம்
பிழைத்தும் இருக்க, மரணத்தை ஜெயமாக விழுங்கிய
உன்னதமானவரை, நாம் எப்படி தொழுவது கொள்வது?

உண்மை என்ன?

நித்திய காலமாக நாம் இந்த சரீரத்திலே ஜீவிக்க
பிறந்தவர்கள்; தேவாதி தேவனை ஆராதிக்க உதித்தவர்கள்;
விண்ணிலே, தேவனை ஆராதனை செய்து வந்தவன்,
கடவுளாக தன்னை உயர்த்தி கொள்ள ஆசைப்பட்டதினால்,
நாம் உருவானோம் இந்த புனித பூமியிலே,
பரம தேவனின் பிள்ளைகளாக (ஆராதனைக்காரர்களாக).
தேவ சாயலில் உருவான நம்மை மிருகமாக மாற்றியவன்
இந்த சாத்தான் (கடவுளின் எதிரி).

எதற்காக?



செய்த தொழிலை இழந்தவன்,
செய் நன்றி மறந்தவன்;
உண்மைக்கு புறம்பானவன்,
உருவாக்கியவரையே எதிர்த்தவன்;
தகுதிக்கு மேல் ஆசைபட்டவன்- தன்னையே
தெய்வமாக்கிக்கொண்டவன்; அழிவுக்கு வித்திட்டவன்,
ஆசைகளை தோற்றுவித்தவன்;
பொய்களின் பிதா, மனித உள்ளங்களின் எதிரியாகிப்போனான்.

எதற்காக?

தேவன் நம்முடைய ஆராதனையைத்தான்
அங்கிகரித்திருக்கின்றார்;
சாத்தானும், அவனது கூட்டமும் (பாவத்தில் விழுந்துபோன
தூதர்கள்), இனி பிதாவாகிய தேவனை வணங்கவே முடியாது;
இது தேவனின் நியாயமான தீர்ப்பு(நித்திய மரணம்).
நமக்கும் இந்த முடிவு கிடைத்து விடும், இவனோடு சேர்ந்து
இந்த உலக வாழ்வை வீணிலே கழித்தால்.



இவனது முடிவு நமது தீர்மாணத்தில் இருக்கின்றது;
ஆம் நாமெல்லாரும் இயேசுவின் பிள்ளைகளானால்,
வந்தது நித்திய மரணம் இவனக்கு;
சதா காலமும் எரியும் அக்கினிக்கடலினிலே ஜீவிக்கும்
வாழ்வு; இது நமக்கு தேவையா நண்பர்களே.

நித்திய காலமாக சரீரத்திலே வாழப்பிறந்த நாம் - இவனது
தவறான வழி நடத்துதலினால் - இன்று அழியும் சரீரத்தில்;
ஆனாலும், அழியாத தேவ சாயலான நமது ஆத்துமாவும்-
ஆவியும் எங்கே போகும்?



ஆராதனைகாரர்களாக பயிற்சி பெறவேண்டிய நாம் - அதை
விட்டு விட்டு, இந்த வேலை இல்லாத வெட்டியானவனோடு
காலங்களை வீணாக செலவு செய்தால், நிச்சயம் நாமும்,
எரியும் நரகத்திலே நித்திய காலமாக வாழ வேண்டியதுதான்;
அதுவும் இவனோடு; இன்று இனிப்பாகத்தோன்றும் இவன்,
தேவ கோபக்கினையின் நித்திய மரண காலத்திலே - பெரிய
பாழும் அருவருப்பானவன்.



தேவாதி தேவன், தம் அன்பிலே உருவாக்கிய, மனித பிள்ளைகள், தமது எதிரியின் பாவப்பிடியினில் (அநீதி) சிக்குண்டதால், அவர்களது வணக்கத்தை, நேரடியாகப் பெற்று கொள்ள, அவர்களது பாவங்கள் தடையாக இருப்பதினால், மனித ரூபமாக, இயேசுவானார்.
எதற்காக?

பிதாவாகிய தேவனுடைய கட்டளைகளை கைக்கொண்டு; சரீரத்திலே சாட்சியாக வாழ்ந்து, தேவனுக்கு எதிரியாகிப் போன, முன்னாள் ஆராதனைக்காரனுக்கு முன்பாக, தேவ சித்தத்தை செய்து முடிப்பதற்காக.
இரட்சகர் இயேசுவை (நித்திய ஜீவனை) வேண்டாம் என்போர், நித்திய மரணத்தை (சாத்தானை) நேசிப்பவர்கள் என்று சத்திய வேதம் சொல்கின்றது.
பிதாவாகிய தேவன், மாம்சத்தில் வந்த இயேசுவை, கிருஸ்துவாக (தமது குமாரனாக), தேவ மகிமையாக உயர்த்தினார்;



சிலுவையின் சரீர மரணத்திற்கு பிறகு.
சரீரத்தில் மரணமடைந்த இயேசுவானவர் - ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டு, விண்ணிற்குரிய மேனியோடு, தேவனின் வலது புறத்தில் வீற்றிருக்கின்றார்; நமது- ஆராதனைகளை, பிதாவிற்காக பெற்றுக்கொள்வதற்கு.

தேவ நீதி இப்படி வெளிப்பட்டிருக்க, சாத்தானோ, மரணம் மனிதனின் தலை எழுத்து என்று சொல்லி, நம்மை ஏமாற்றி வருகின்றான்; ஆனால்!
இவனது தலைவிதி என்ன தெரியுமா?
நித்திய மரணம்.

எழுத்து வார்த்தையின் அதிகார வடிவம்; தேவ வார்த்தையாக இருந்தவர் நம் அன்பின் இரட்சகர் கிருஸ்து பெருமான்; ஆனால்! சாத்தானோ, பல பெருமான்களின் கதைகளை நம்மிடம் கட்டவிழ்த்து விட்டிருப்பது நம்மை பயித்தமாக்குவதற்காக; அவன் என்னவோ தெளிவாகத்தான் நடமாடிக்கொண்டு இருக்கின்றான்.
ஏன் தெரியுமா?

தன் முடிவு அறிந்தவன் இந்த திருடன்.
தெய்வீக வார்த்தைக்குள் (இயேசுவுக்குள்) எல்லா
சக்தியும் (வல்லமை) அடங்கி இருக்க, கடவுள் மனிதனுக்கு
துணையாக உருவாக்கிய பெண்ணை,
கடவுளுக்கு சமமாக மாற்றியுள்ளான்.
ஆண், பெண்ணை படைத்த இறைவன், அவர்களை
அறிவு பெற்றவர்களாகவே உருவாக்கினார்,
குழந்தைகளாக அல்ல, வளர்வதற்கு.
இவனது பாட்டி கதைகளில் பிரபலமானது, கடவுள் குழந்தை
பெற்று கொள்ள குடும்பம் வேண்டுமென்பது.
சமுதாய நோக்கும், தொலைதூரப்பார்வையும் கொண்ட
நமது பரம பிதா, கொடுத்த முதல் சுதந்திரமே,
பிள்ளைகளின் சரீரத்தை நாமே உருவாக்க
வேண்டும் என்பதுதான்.
இதில் இவன் (சாத்தான்) என்ன பெரிய ஆராய்ச்சி
செய்து விட்டான், நாம் ஆதி தாயனவளை வணங்குவதற்கு.
அவள் இவனது ஆராதனை பசிக்கு துணை சென்றதால்,
செய்யும் கைமாறு இதுதானோ!

இருந்தாலும் முதல் தாயைப் போற்றுவோம்;
முதலில் தவறினாலும் பிள்ளை பெற்ற போது,
அவள் கர்த்தரால் வந்த சுதந்திரம் என்று,
தேவனைத்தான் துதித்தாள், இந்த திருடனை அல்ல.
பெற்றவரை கனம் பண்ண வேண்டும் என்று, தெளிவாக
கூறியிருக்கின்றார் இறைவன்;
நம் கர்த்தராகிய இயேசு கிருஸ்து அப்படியே வாழ்ந்தும்
காட்டியுள்ளார்; அவர் (இயேசு)
எப்பொழுதும் தமது பிதாவாகிய தேவனையே
மகிமைப்படுத்தினார்.

நமக்குத்தான் கொஞ்ச நேர (பாவ) போதை போதுமே,
பாதை மாற; தெளிவு எதற்கு?
உண்மை கசக்கும் என்று நம் வாயினால்
உரைக்க வைக்கும் சாத்தான், பொய்க்கு பிதா என்று நம்மில்
எத்தனை பேருக்குத் தெரியும்.
கனம் செய்வது என்றால் பெற்றவர்களை, அவர்களின் வயதான
காலத்திலே போஷிப்பது;

இளமையிலோ, அவர்களுக்கு கீழ்ப்படிவது.
அதை ஆராதனையாக மாற்றி, இவனல்லவா கடவுள் விரோத கதைகளை உருவாக்கி வைத்திருக்கின்றான்.

நீதியில் பிரியமுள்ளவன், அநீதியில் ஆசை வைக்கமாட்டான்;
உயிர்களை உருவாக்கும் வல்லமையில்லாதவன் சாத்தான்;
மனிதர்கள், தேவனிடமிருந்து பெறும் குழைந்தைகளை,
இவன் திருடிப்போவதற்கு எத்தனை நாள் இறைவன் பொறுத்திருப்பார்.

சாத்தான் மிகவும் வேடிக்கையான பிறவியாகிப்போனவன்;
பாருங்கள் பாம்புக்கு பாலையும் ஊற்றச்சொல்லுகிறான்,
சீறினால் அடிக்கவும் சொல்லுகிறான்.
தாயை வணங்கவும் சொல்லுகிறான்; சிலரை, தனது
தீய ஆவிகளை கொண்டு ஏவி, உதைக்கவும் வைக்கிறான்.
தேவ சித்தம் மனித வாழ்வில் முழுமையாய் நிறைவேறாமல்
போனதுதான் அநீதி (பாவம்).
அதனால்தான் தன்னிலை உணர்த்த - தேவன்
திரு குமாரனாக உலகிலே தோன்றினார்.
மாம்சத்திலே உலாவினாலும், தேவ ஆவியின்
குணாதியசங்களை வெளிப்படுத்தினார் இயேசு பெருமான்.
அதுதான் அன்பாகவே வாழ்வது, எல்லா சூழ்நிலையிலும்.
கல்வாரி சிலுவையில், தமது சரிர மரண வேதனையிலும்,
நம் ஜீவனைக்காக்கும்படி பிதாவாகிய தேவனிடம் வேண்டியவர்,
என்றும் நித்தியஜீவனில் வாழும் தேவ குமாரன்.



தேவ சித்தத்தை பூமியிலே நிறைவேற்றியவர் ஒருவரே;
தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்த்தர் அவரே;
இரத்தம் சிந்தி உறவை ஏற்படித்தியவரே; இரட்சகரும்,
மீட்பருமானவரே; ஆத்துமாவின் தந்தையே, பரிசுத்தம்
நிறைந்தவரே; இயேசுவே, அவர் நம் தேவனே.

பரம தந்தை, தமது மகிமையை, தமது சாயலும், ரூபமுமான

இயேசுவின் மூலம் ஒருமைப்படுத்தினார்.
எப்படி?
பரம தந்தை, தம்மில்தாமே ஜீவனுள்ளவராய் இருப்பது போல,
தமது ஒரே பேரான குமாரனும் ஜீவனுள்ளவராய் இருக்கும்படி,
கிருபை அளித்துள்ளார்.
எதற்காக?
நித்திய காலமாக நாம் செலுத்தும் ஆராதனையை
பெற்றுக் கொள்வதற்காக.
அது எப்படி நாம் நித்திய காலமாக வாழ்வது?
நித்தியஜீவனை உடைய இயேசுவை
தந்தையாக ஏற்றுக்கொள்ளும்போது.
எதிரியையும் நேசிக்கும் பண்பு
இயேசுவின் அன்பு.



இச்சையான பார்வையே விபசாரம்தான்
என்று உலகிற்கு கசையடி கொடுத்தவர் இயேசு நாதர்.
இது தெய்வப்பண்பல்லவா; இவர்
பரலோகத்தில் வாழும் பரிசுத்தரின் பிள்ளையல்லவா.

பெண்கள் தீட்டுப்பட்டவர்களல்ல;
தேவன் அவர்களை துணையாகத்தான் கொடுத்திருக்கின்றார்.
ஆனால், அவர்களை போதைப் பொருளாக்கும் உரிமையை
பெறவில்லை எவரும் உலகில்.
பாருங்கள் திருடனின் (சாத்தான்) லீலைகளை;
மிருகத்தினுள் அனுமதியின்றி நுழைந்த இவன்,
இறுதியில் மனித உடலுக்குள்,
இன்று தாராளமாக புக, குடியுரிமையுடையவனாக,
பூமியெங்கும், எவரை விழுங்கலாமோ என்று சுற்றித்
திரிகின்றான்.
இதற்கு வித்திட்டவள் ஆதித்தாய்; பாருங்கள்,
இவன் அந்த தாயின் பிள்ளைகளுக்கு செய்யும் உபகாரத்தை.
காட்சிப்பொருளாகவல்லவா மாற்றியிருக்கின்றான்
அவர்களை! (catwalk, miss world).
இதில் இந்த பயித்தகாரன் மனிதருக்கு கற்றுக்கொடுத்த
விநோதம், 'miss universe?';
பரமண்டலங்களிலே, ஆண் என்றும், பெண் என்றும் இல்லை;
புசிப்பும், குடிப்பும் தேவ ராஜ்யமல்ல.

'மனுஷனோ முகத்தை பார்க்கின்றான்;
தேவனோ இருதயத்தின் நினைவுகளை சோதித்தறிகிறவர்'.



நாம் வெளித்தோற்றத்தை பார்த்தே, விபரம் கெட்டுப் போனவர்கள்; அதனால், 'miss universe', போட்டியில் மிகவும் மகிழ்ச்சி கொள்ளுகிறோம்.
அநீதி (பாவம்) மட்டுமே மிஞ்சியுள்ளது சாத்தானிடம்;
இவனே தீய சக்தி; இவன் மனிதர்களுக்குப்போதிப்பது, தீய சக்திகளிடமிருந்து எப்படி தங்களை காத்துக்கொள்வது என்று.
மனிதனின் சரீரம் உன்னத தேவனின் ஆலயம்.



ஏனென்றால்,
அங்கே தேவ ஆவியானவர் தங்கும் வாசஸ்தலமுள்ளது (உள்ளம்).
புத்தியுள்ள மனிதன் காதுள்ளவன்;
காதுள்ளவன் தெய்வ வார்த்தைகளை கேட்கும்போது, தன் உள்ளத்திலே அருளப்பட்ட தேவ சாயலை உணருபவன்.
இதுதான் உண்மை கடவுளின் நம்பிக்கை (விசுவாசம்).
நாம் என்றாவது ஒரு நாள், பரம தேவனின் பிள்ளைகள் என்பதை உணருவோம் என்று,
அவர் (இயேசு) பொறுமையுடன் காத்து இருக்கின்றார்.
தேவன் நம் பாவ உள்ளத்தின் எண்ணங்களை சுட்டெரிக்கும் அக்கினியாக இருக்கின்றார்;
அதனால் சரீரத்தை வருத்துவதை நிறுத்திடுவோம்.

எல்லா வழிமுறைகளையும் முயற்சி செய்யத்தூண்டும் பொல்லாத பிசாசு, இயேசுவிடம் மாத்திரம் போக வேண்டாமென்பது ஏன்?
காதுள்ளவன் கேட்க கடவன் என்று அழைக்கின்றார் இயேசு நாதர்.
கேளுங்கள், ஆச்சர்யப்படுவீர்கள்.
இவன் மாம்சத்தில் வந்த இயேசு நாதரிடம் கேட்டதும் இதைத்தான், 'நீர் தேவ குமாரன் என்றால் இந்த கல்லுகளை அப்பமாக்கும் என்று'.
ஆதிமனிதன் முதல் கிறிஸ்து இயேசுவரை, சாத்தானின் நோக்கம் ஒன்றே; அது மனுஷ கொலைபாதகம்.

ஏன்? ... ஏன்?



தேவன் மனுஷனை தம் பிள்ளையாக உருவாக்கி, அவனுக்கு ஆராதனை செய்யும் வேலையை கொடுத்தார்.
ஆராதனை, தேவ ராஜ்ஜியத்தில் மிகவும் புனிதமான பணி;
மற்றெல்லா கிரியைகளிலும் சிறந்தது.
ஏனென்றால் தேவன் துதிகளின் மத்தியில் வாசம் செய்பவர்.
ஆராதனை செய்பவர்கள் தேவனின் பிள்ளைகள்.
இந்த புனிதப்பணியை செய்தவன், பெருமையில் வீழ்ந்து, கடவுளின் எதிரியாகிப்போனான் (சாத்தான்).
படைத்த தெய்வத்திற்கு முன்பாகத் தன் சுய மகிமையைத் தேடினவன்;அபிஷேகம் பெற்ற ஆராதனை கூட்டத்தின் தலைவனாக இருந்தவன்; பணி நீக்கம் பெற்றவன்;
இன்று, அந்த பணிக்காக உருவாக்கப்படும் மனிதரை, எப்படி நேசிக்க முடியும்?

கொஞ்சம் யோசிப்போம்!
இது கற்பனையல்ல.
சாத்தானின் கற்பனையில் உருவான பல வழிபாட்டு உருவங்களேஅதற்கு சாட்சிகள்.




ஜீவனுள்ள தேவனின் பிள்ளைகளாக படைக்கப்பட்டவர்கள் நாம்;
ஆனால் இன்று நம்மில் எத்தனை பிரிவுகள்.
உலகமே ஒரே குடும்பமாக, இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கின்றார்.

**இது மதமாற்றமல்ல**

அநீதியிலிருந்து விடுதலைப்பெற்று,
நீதியை தரித்துக்கொள்வது.
தீமையைவிட்டு விலகி, நன்மையை சுதந்திரித்துக்கொள்வது.

ஒரே ஒரு கேள்வி மாத்திரம் நம் உள்ளத்தில் எழுப்பினால் போதும்; வாழ்க்கையே மாறிப்போகும்.

**அது தேவன் எப்படி இருப்பார்?**

இதைத்தான் அந்த உண்மைத்தெய்வமும் கேட்கச் சொல்கின்றார்;
'கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்',
என்று.
சாதரணமாக திராட்சப்பழத்தையே ருசிக்காமல் வாங்காத புத்திசாலிகள் நாம்; அதனால் கர்த்தரை ருசித்துதான் பார்ப்போமே; அவர் அன்பின் உருவத்தில் (இயேசுவின்) அழைக்கின்றார்; நமக்குத்தான் பயம்; எங்கே நம்முடைய பாவங்களின் கணக்கு வெளிப்பட்டு, உண்மை உலகிற்கு தெரிந்து விடுமோ என்று.
கவலைப்படவேண்டாம்.
நம்முடைய எல்லா பாவங்களையும்,
மீறுதல்களையும், அக்கிரமங்களையும், சாபங்களையும்,
இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே சுமந்து தீர்த்தார்.
'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் (இயேசு) காயப்பட்டு,
நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்;
நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவர் தழும்புகளால் குணமாகிறோம்;
நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பி திரிந்து,
அவனவன் தன்தன் வழியிலே போனோம்
(இன்றும் போகிறோம்);
கர்த்தரோ (பரம தந்தை), நாமெல்லாருடைய
அக்கிரமத்தை அவர் (இயேசு) மேல் விழப்பண்ணினார்'.





மரணத்தை ஜெயமாக விழுங்கியவர் நமது இரட்சகர் (இயேசு);
நமது எல்லா இன்னல்களுக்கும் முடிவானவர்;
நன்மையை சுதந்திரமாக கொடுத்திருக்கின்றார்.
இந்த சுதந்திரம் இலவசமாக நமக்கு கிடைத்த வெற்றி;
ஆனால் கிறிஸ்துவின் இரத்தம் அதற்கு விலையாக கொடுக்கப்பட்டுள்ளது.
நம்மில் எத்தனை பேர் அவர் நாமத்தினாலே,
தேவனை தந்தையாக ஏற்றுக்கொள்ளுகிறோமோ,
அத்தனை பேருக்கும் விடுதலையுண்டு,
அநீதியிலிருந்து (பாவத்திலிருந்து).

'ஒருவன் தன்னில் பாவம் இல்லையென்றால்,
அவன் தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்ளுகிறான்',
என்று தேவ குமாரன் இயேசுவானவர் கூறுகின்றார்
(நம் புத்தியீனத்தை அறிந்தவர் அவர்).
நாம் படித்தவர்களாக இருக்கலாம்;
நல்ல வேலை செய்பவராக வாழலாம்;
விவசாயமோ, வியபாரமோ புரியலாம்;
தேவனின் பார்வையிலே, நாமெல்லாரும்,
இயேசுவின் பிள்ளைகள்தான்.

எந்த மனுஷனுக்கும் கிடைப்பது ஒரு வாழ்வு.
வேறு கதைகளில், பல பிறவிகள் உளது
என்பது, வீணான வியாக்கியானம்.
பொய்களை நம்பி இன்று மோசம் போகக் கூடாது.
தெய்வத்தின் விசாரனை நாளிலே, பதில் சொல்ல
இயேசுவின் முன்பாக;
பேசித்தான் ஆக வேண்டும் (must speak position).
ஏனென்றால், நமக்கு இந்த சரீரம் இருக்காது;
ஆவி உலகத்திற்குரிய உடலையுடையவராக
உயிர்ப்பிக்கப்படுவோம்;
யாருடன் வாழப்போகிறோம் என்பது தேவனின்
நியாயமான தீர்ப்பிலே தெரிந்துவிடும்;
அது சத்தியமானது, முடிவானது.

**இது மதப்பிரச்சினையே அல்ல, உண்மையில்
உறவுப்பிரச்சினை**.
எப்படி?
நாம் தெய்வத்தின் பிள்ளைகளாக, நித்திய காலமாக
வெளிச்சத்தில் (இயேசுவே உலகத்தின் ஒளி) ஜீவிப்பதா?
இல்லை, அவரது எதிரியுடன் (ஒளியின் வேஷம்
தரித்தவன்), நித்திய காலமாக இருளிலே வாழ்வதா?
மறுபடியும் ஒரு உண்மையை தெளிவாகப்புரிந்து
கொள்ளுவோம்.
**கடவுளின் எதிரி (சாத்தான்) நமக்கும் எதிரிதான்.**

எப்படி?

அவனுக்கு அளிக்கப்பட்ட தண்டனையில், சுலபமாக நம்மையும் பங்குதாரர்களாக மாற்றியவன் இவன்; அது மாத்திரமல்ல, நம்மை பரலோகத்தந்தைக்கும் விரோதமாகத்திருப்பியவன்.




யார் இதற்கு காரணம்?

நாமேதான்; இந்த திருடனும், அவனது ஆவி கூட்டங்களும், தேவ அனுமதியின்றி, நம்முடன் தொடர்பு கொள்ள அதிகாரத்தை அளித்துவிட்டோம்.

எப்படி?

நம்முடைய உள்ளமும், மனதும், இன்று உருவாக்கும் ஆசை கனவுகளுக்குச்சொந்தக்காரன் சாத்தான்.

ஏன் இப்படியானது?


இவனைப்போல நாமும் கடவுளாக ஆசைப்பட்டதினால் வந்த விளைவு.
சாத்தானுக்கு பூமிக்குரிய சரீரமில்லை, அதனால் விபரீத கற்பனைகளை உற்பத்தி செய்து, பரிசுத்தமான தெய்வத்தின் சாயலை, மிருகத்திற்கும், பறவைகளுக்கும், ஊறும் பிராணிகளுக்கும் ஒப்பாக மாற்றியிருக்கின்றான்.
நாமும் அதற்கு பங்காளிகள்தான்; நம்முடைய கரங்களே இவை எல்லாவற்றையும் உருவாக்குகின்றது.
அப்படியென்றால், நம் கையின் கிரியைகளை வணங்குவது, இவனது கற்பனைகளை ஏற்றுக் கொள்வதைத்தானே உறுதிப்படுத்துகின்றது.
பிறகு இந்த ஆராதனைகள் யாருக்குச்சொந்தம்?
சற்று யோசிப்போம்.

கடவுளின் கற்பனைகளை இயேசுகிறிஸ்து, நமக்கு சத்திய வேதமாக கொடுத்திருக்கின்றார்.
'தேவன் ஆவி உருவில் அக்கினியாய் இருக்கின்றார்; ஆகையால், அந்த புனிதரை, ஆவியோடும்,

உண்மையோடும், நம்முடைய முழு உள்ளத்திலும், முழு ஆத்துமாவுடனும், முழு மனதுடனும், முழு பெலத்துடன் தொழுதுகொள்ள வேண்டும்.
தேவக்குமாரன், இந்த உலகத்திலே நம்மிடம் கேட்பது, அவரது தந்தை நம்மிடம் கொடுத்திருக்கும் அழியாத ஆத்துமாவை, அழியும் பொருள்களை அல்ல.
சகலமும் அவராலே (இயேசு) படைக்கப்பட்டிருக்க, அவரோ, நம்முடைய உள்ளத்தை நேசிப்பவராக இருக்கின்றார்.

ஏன்?
அங்கேதான் அவரது சாயல் (ஆத்துமா) உள்ளது.
இந்த தேவசாயல் வெளிப்படும் போது, நாம் எல்லோரும் இயேசுவின் பிள்ளைகளாகின்றோம்; அவரைப்போலவே; அதிலே தேவன் மகிமைப்படுகின்றார்.
இந்த உலகிலே நாம் தேவனை மகிமைப் படுத்தாவிட்டால், பிறகு எப்படி அவரது இராஜ்ஜியத்தில் சுதந்திரம் பெறமுடியும்.

தேவ மகிமையின்மீது பொறாமை கொண்டவன், பிசாசு என்று அழைக்கப்படும் சாத்தான்.
தேவ மகிமையாக உருவான நாம், இன்று இவனது தவறான போதனைகளால், அதை இழந்து தவிக்கின்றோம்.
நாம் இழந்த அந்த மகிமையை, கல்வாரி சிலுவையிலே தமது ஜீவனைத்தந்து, மறுபடியும் நமக்கு பெற்றுத்தந்தவர் இரட்சகர் இயேசு பெருமான்.



எப்படி?

சத்திய பாதையிலே நடக்க, நமக்கு தேவை, தேவ வார்த்தை;
தேவ வார்த்தையான இயேசு, நமக்காக மாம்சமானார்.
மாம்சத்திலே வந்த அவர், தேவ தீர்ப்பின்படி சரீரத்திலே மரித்து, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்; நித்திய ஜீவனையுடைவரானார்; அவரது கிருபை (மாறாத அன்பு), நாம் இழந்த மகிமையை (பரிசுத்த ஆவியை), திரும்பவும் அளிக்கின்றது.

இந்த மீட்பு, நாம் சரீரத்திலே வாழும்போது கிடைக்கும் உன்னதரின் அன்பு பரிசு.
அதைப்பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு மனுஷனும், தேவப் பிள்ளையாக மறுபடியும் பிறக்கின்றான்; மனித படைப்பின் நோக்கமும் அதன்மூலம் நிறைவேறுகின்றது.



**'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவ சாயலை பெறாவிட்டால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான்',** என்று வேதம் தெளிவாக கூறுகின்றது.

தேவ சாயலை உணராதவன், சுய மேன்மையை தேடுபவன்; அவன் தேவனுக்கு சத்துருவாக இருக்கின்றான்.

ஆமென்,
கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.